## "அம்பேத்கர் வழியை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும்" - உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி


தலைமை நீதிபதி சந்திரசூட்

**புதுடெல்லி:** 75 ஆண்டுகளுக்கு முன்பு அம்பேத்கர் வகுத்த அடிப்படைக் கோட்பாடுகளை நீதித்துறை பின்பற்றி வருகிறது. இந்த நாள் பொன் எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது என இந்திய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்துள்ளார். டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 67-வது நினைவு தினத்தையொட்டி அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 67-வது நினைவு தினம் இன்று (டிச.6) அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் சிலைக்கு இன்று இந்திய தலைமை நீதிபதி மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதையடுத்து அவர் ஒரு தனியார் செய்தி தொலைக்காட்சிக்கு அளித்தப்பேட்டியில், "இந்த நாள் பொன் எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது. இன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வாழ்க்கையை நாம் நினைவுகூர்கிறோம்.

75 ஆண்டுகளுக்கு முன்பு அம்பேத்கர் வகுத்த அடிப்படைக் கோட்பாடுகளை நீதித்துறை பின்பற்றி வருகிறது. எனவே இது எங்களுக்கு முக்கியமான நாள். இந்த ஆண்டு, உச்ச நீதிமன்ற வளாகத்தில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் சிலை திறக்கப்பட்டது. அதன்மூலம் அவர் நம்முடன் இருப்பதாக உணர்த்தப்படுகிறது. அம்பேத்கரின் வாழ்வியல் கருத்துகளையும், கொள்கைகளையும் இளைஞர்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் என அனைவரும் பின்பற்ற வேண்டும். இந்த சட்ட கருத்தியல் என்பது நீதிபதிகள், வழக்கறிஞர்களுக்கானது மட்டுமல்ல. அனைத்து தரப்பு மக்களுக்குமானது” என்றார்.

முன்னதாக அரசியலமைப்பு தினத்தையொட்டி, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 7 அடி உயர சிலையை நவம்பர் 26 ஆம் தேதி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## பாதாளச் சாக்கடை, கழிவுநீர் தொட்டி சுத்திகரிப்புப் பணியின்போது இந்த ஆண்டு 49 பேர் உயிரிழப்பு: மத்திய அரசு தகவல்


படம்: எஸ்.எஸ்.குமார்

**புதுடெல்லி:** பாதாளச்சாக்கடை மற்றும் கழிவுநீர் தொட்டிகளைப் பாதுகாப்பற்ற முறையில் கையால் சுத்தம் செய்யும் பணியின் போது 2023, நவ. 20-ம் தேதி வரையில் 49 பேர் உயிரிந்துள்ளதாக மக்களவையில் மத்திய அரசு செவ்வாய்கிழமை (டிச.5) தெரிவித்துள்ளது.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. அபரூபா போட்டார், கழிவுகளைக் கையால் சுத்தம் செய்தல், கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் பணிகளின் போது நிகழ்ந்த உயிரிழப்புகளைத் தடுக்க மனிதர்களைக் கொண்டு கழிவுகளை சுத்தம் செய்யப்போவதில்லை என்ற திட்டம் எந்த நிலையில் உள்ளது என மக்களவையில் கேள்விகள் எழுப்பி இருந்தார்.

இதற்கு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் ராமதாஸ் அத்வாலே பதில் அளித்து பேசுகையில், "கடந்த 2018-ம் ஆண்டு முதல் ஆபத்தான முறையில் பாதாளச் சாக்கடை மற்றும் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் பணியின் போது 443 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தாண்டு (2023) நவ.20 தேதி வரை 49 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் அதிகபட்சமாக ராஜஸ்தான் மாநிலத்தில் 10 பேரும், குஜராத்தில் 9 பேரும், தமிழகத்தில் 7 பேரும், மகாராஷ்டிராவில் 7 பேரும் உயிரிழந்துள்ளனர். மேலும் கழிவுகளை அகற்ற இயந்திரங்களைப் பயன்படுத்துவது பற்றிய தரவுகள் ஏதும் இல்லை" என்று தெரிவித்தார். கழிவுநீர் சுத்தம் செய்யும் பணிகளுக்கு இயந்திரங்களை அறிமுகம் செய்யப்போவதாக மேற்கு வங்கம், கேரளா, மகாராஷ்டிரா மாநில அதிகாரிகள் அறிவித்திருக்கும் நிலையில், மத்திய அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2022-ம் ஆண்டு ’தி இந்து’ நாளிதழ் வெளியிட்ட செய்தியின் படி, ஏற்கனவே கழிவுகளை சுத்தம் செய்யும் பணியாளர்களைப் பற்றி நாடுதழுவிய அளவில் கணக்கெடுக்கும் பணியினை மத்திய அரசு கணக்கில் எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு தற்போது கடந்த 2018-ம் ஆண்டு தூய்மைப் பணியாளர்களைப் பற்றி எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே செயல்பட்டு வருகிறது. அதன்படி, சுமார் 58,000 தூய்மைப்பணியாளர்கள் தங்களின் மறுவாழ்வு திட்டத்தில் பதிவு செய்துள்ளனர். ஆனால் இந்த

எண்ணிக்கை மிகவும் குறைவானது, இன்னும் பல இடங்களில் மனிதர்களைக் கொண்டு கழிவுகளைச் சுத்தம் செய்யும் வழக்கம் உள்ளது என்று சமூக செயல்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, 766 மாவட்டங்களில், 716 மாவட்டங்கள் கழிவுகளை சுத்தம் செய்யும் பணிக்கு மனிதர்களை ஈடுபட்டுத்துவதில்லை என்று அறிவித்துள்ளன. அவ்வாறு அறிவிக்காத மீதமிருக்கும் மாவட்டங்களில் இருக்கின்ற சுகாதாரமற்ற கழிவறைகள் பற்றி அறிக்கை அளிக்கும் படி வலியுறுத்தப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், கழிவுகளை அகற்ற மனிதர்கள் பயன்படுத்தப்படவில்லை என்ற சுயஅறிவிப்பும், அந்த மாவட்டங்களில் சுகாதாரமற்ற கழிப்பறைகளின் எண்ணிக்கையை பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. அந்த மாவட்டத்தில் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இல்லை என்றால் அங்கு கழிவுகளை கையால் சுத்தம் செய்யும் பணியாளர்கள் இல்லை என்று பொருள் என மூத்த சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சியாச்சினில் முதல் முறையாக ராணுவ பெண் மருத்துவர்

சியாச்சின் ராணுவத்தின் மருத்துவ பிரிவில் மருத்துவராக தேர்வானவர் கேப்டன் கீதிகா கவுல்.

இவர் உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சின் பனிமலைப் பகுதியில் பணியாற்ற விருப்பம் தெரிவித்திருந்தார். இதையடுத்து இவர் ராணுவத்தின் பனி சிறுத்தை படைப்பிரிவில் (ஸ்னோ லியோபர்ட் பிரிகேட்) சேர்ந்து சியாச்சினில் பணியாற்றுவதற்கான பிரத்யேக பயிற்சியை சியாச்சின் போர்க்கள பள்ளியில் பெற்றார். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பலவிதமான பயிற்சிகளை அவர் திறம்பட முடித்தார்.

இதையடுத்து அவர் சியாச்சின் பனிமலைப் பகுதியில் உள்ள ராணுவ முகாமில் மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சியாச்சினில் பணியாற்றும் ராணுவ வீரர்களுக்கு தேவையான சிகிச்சைகளை அளிப்பார்.

## தெலங்கானா முதல்வராக ரேவந்த் ரெட்டி தேர்வு: நாளை பதவியேற்பு



**ஹைதராபாத்:** தெலங்கானா மாநிலத்தின் முதல்வராக அம்மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டியை காங்கிரஸ் மேலிடம் தேர்வு செய்துள்ளது.

தெலங்கானா மாநில சட்டப் பேரவைக்கு கடந்த மாதம் 30-ம் தேதி நடந்த தேர்தலில், 119 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி 64 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மை பெற்றது. இதையடுத்து, காங்கிரஸ் மாநில கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டிதான் அடுத்த தெலங்கானா மாநில முதல்வர் என கூறப்பட்டது. ஆனால், காங்கிரஸில் முதல்வர் பதவிக்கு மூத்த தலைவர்கள் பலர் போட்டியிட்டனர். இதையடுத்து, கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே.சிவக்குமாரை காங்கிரஸ் மேலிடம் தெலங்கானாவுக்கு அனுப்பிவைத்தது. அவர், சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் யார் என்பதை முடிவு செய்ய ஒரு கூட்டத்தை நடத்தினார். பின்னர், திங்கட்கிழமை இரவு டெல்லிக்கு சென்று நடந்த விவரங்களை கட்சி மேலிடத்துக்கு எடுத்துக் கூறினார்.

**டெல்லியில் ஆலோசனை:** இது தொடர்பாக காங்கிரஸ் கட்சித்தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில், சோனியா காந்தி, ராகுல்காந்தி, டி.கே சிவக்குமார் உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர். பின்னர், அகில இந்திய

காங்கிரஸ் கமிட்டியின் பொது செயலாளர் கேசி. வேணுகோபால் வீட்டிலும் இந்த பிரச்சனை குறித்து நேற்று மாலை ஆலோசனை நடத்தப்பட்டது.

அதன் பின்னர், நேற்றிரவு வேணுகோபால் டெல்லியில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தெலங்கானா மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டியை முதல்வராக அறிவிக்கிறேன். அவர் 7-ம் தேதி பதவியேற்பார். மற்ற விவரங்கள் நாளை (இன்று) வெளியிடப்படும். இவ்வாறு வேணுகோபால் கூறினார்.

## உலக குத்துச்சண்டை ஜூனியர் சாம்பியன்ஷிப்: 3 தங்கம் உட்பட 17 பதக்கங்கள் வென்றது இந்தியா



**யெரெவான்:** உலக குத்துச்சண்டை ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 3 தங்கம், 9 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 17 பதக்கங்கள் வென்றது.

அர்மேனியாவில் உள்ள யெரெவான் நகரில் உலக குத்துச்சண்டை ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன. இதில் மகளிருக்கான 48 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் பாயல், அர்மேனியாவின் பெட்ரோசியன் ஹெகினேவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். 52 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீராங்கனை நிஷா 5-0 என்ற கணக்கில் தஜிகிஸ்தானின் அப்துல்லாவா

ஃபரினோஸையும், 70 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அகன்ஷா 5-0 என்ற கணக்கில் ரஷ்யாவின் டைமசோவாவையும் வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றனர்.

54 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அமிஷா, 57 கிலோ எடைப் பிரிவில் வினி, 63 கிலோ எடைப் பிரிவில் ஷிருஷ்டி சாதே, 80 கிலா எடைப் பிரிவில் மேகா, 80 எடைப் பிரிவில் பிராச்சி டோகாஸ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றனர். 46 கிலோ எடைப் பிரிவில் நேகா லுந்தி, 50 கிலோ எடைப் பிரிவில் பாரி, 66 கிலோ எடைப் பிரிவில் நிதி துல், 75 கிலோ எடைப் பிரிவில் கிருத்திகா ஆகியோர் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினர்.

**ஆடவர் பிரிவில்..** ஆடவர் பிரிவில் ஜதின் (54 கிலோ எடைப் பிரிவு), சாஹில் (75 கிலோ எடைப் பிரிவு), ஹர்திக் பன்வார் (80கிலோ எடைப் பிரிவு), ஹேமந்த் சங்க்வான் (80 கிலோ எடைப் பிரிவு) ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றனர். 48 கிலோ எடைப் பிரிவில் சிகந்தர் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார். ஒட்டுமொத்தமாக இந்தத் தொடரில் இந்தியா 3 தங்கம், 9 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 17 பதக்கங்கள் வென்றது.

## 2030-ல் இந்தியா பெரிய பொருளாதார நாடாகும்: சர்வதேச எஸ் அண்ட் பி குளோபல் நிறுவனம் கணிப்பு

EVA STALIN




**நியூயார்க்:** அமெரிக்காவின் நியூயார்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் எஸ் அண்ட் பி குளோபல் நிறுவனம் சர்வதேச பொருளாதாரம் குறித்து ஆய்வு நடத்தி 62 பக்க அறிக்கையை வெளியிட்டு உள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

ரஷ்யா- உக்ரைன் போர், இஸ்ரேல் - ஹமாஸ் போர், அமெரிக்கா- சீனா இடையிலான பதற்றம் உள்ளிட்ட பிரச்சினைகள் சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. இந்த பிரச்சினைகளால் சர்வதேச அளவில் உணவு பொருட்கள், பெட்ரோலிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 4.6 சதவீதமாக இருக்கும். அந்த நாட்டின் வீட்டு வசதி துறை பெரும் பின்னடைவை சந்தித்து வருகிறது. இதன் காரணமாக அடுத்த ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 3 சதவீதமாகக் குறையக்கூடும். சீனாவில் வரும் 2026-ல் பொருளாதார வளர்ச்சி 4.6 சதவீதமாகவும் இருக்கும்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் சீனாவுடனான வர்த்தகத்தை கணிசமாக குறைத்துள்ளன. தென்சீனக் கடல் விவகாரம், தைவான் பிரச்சினைகளால் சர்வதேச அரங்கில் சீனா பெரும் பின்னடைவை சந்தித்து வருகிறது.

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி நடப்பு 2023-ம் ஆண்டில் 2.4 சதவீதமாக இருக்கும். 2024-ல் 1.5%, 2025-ல் 1.4%, 2026-ல் 1.8 சதவீதமாக மட்டுமே இருக்கும். ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் அமெரிக்காவை போன்றே பின்தங்கிய நிலையில் உள்ளன.

அதேநேரம் சர்வதேச பொருளாதாரத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா உருவெடுத்து உள்ளது. நடப்பு 2023-ம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.4 சதவீதமாக இருக்கும்.

வரும் 2024-ம் ஆண்டிலும் 6.4. சதவீத பொருளாதார வளர்ச்சியை அந்த நாடு எட்டும். வரும் 2025-ம் ஆண்டில் 6.9 சதவீதத்தையும் வரும் 2028-ம் ஆண்டில் 7 சதவீத பொருளாதார வளர்ச்சியையும் இந்தியா எட்டும்.

அடுத்த 3 ஆண்டுகள் அதிவேகமாக வளரும் நாடாக இந்தியா விளங்குகிறது. தற்போது சேவைத்துறை வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் அந்த நாடு, படிப்படியாக உலகின் உற்பத்தி மையமாக மாறிவருகிறது.

இந்தியாவின் திறமைவாய்ந்த தொழிலாளர்கள், பெண் தொழிலாளர்களின் பங்களிப்பால் அந்த நாடு அபார வளர்ச்சி அடைந்து வருகிறது. அந்த நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரம் அபரிமிதமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகின்றன. அடுத்த 10 ஆண்டுகள் சர்வதேச நிதிச் சேவை, நுகர்வோர் தொழில்நுட்பத்தில் இந்தியா கோலோச்சும். இந்தியாவின் ஆட்டோமொபைல் துறையும் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகள் வரிசையில் இந்தியா தற்போது 5-வது இடத்தில் இருக்கிறது. வரும் 2030-ம் ஆண்டில் உலகின் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்.

இவ்வாறு எஸ் அண்ட் பி குளோபல் தெரிவித்துள்ளது

EVA STALIN IAS ACADEMY